2022 ஏப்ரல் 12]

திரு. டி.கே.ஜி. நீலமேகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் உள்ளிட்ட அனைவருக்கும் வணக்கம். தஞ்சாவூர் அரசு மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சைப் பிரிவு இல்லாமல் இருக்கிறது. தஞ்சையைச் சுற்றியிருக்கின்ற 4, 5 மாவட்டங்களுக்கு அது அவசியமான ஒன்றாகும். அங்கிருக்கக்கூடிய இருதய நோயாளிகள், இருதய அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்றால், சென்னைக்கோ அல்லது திருச்சிக்கோ செல்ல வேண்டியிருக்கின்ற காரணத்தால், தஞ்சை அரசு மருத்துவமனைக்கு ஓர் இருதய அறுவை சிகிச்சைப் பிரிவை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை என்பது மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. பல்வேறு சிறப்பு மருத்துவப் பிரிவுகளையும் உள்ளடக்கியிருக்கிறது. ஏற்கெனவே அந்த மருத்துவக் கல்லூரிக்கு நான் இரு முறை ஆய்விற்குச் சென்றிருக்கிறேன். அங்கு இரு புதிய பிரிவுகள் தொடங்கப்பட வேண்டியிருக்கிறது. அடுத்து வருகின்ற மானியக் கோரிக்கையின்போது, அது சம்பந்தமாக அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 100, கேள்வி பதில் பகுதியில்,* century *அடித்துவிட்டோம். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

100—

திருக்கோயிலைச் சீரமைத்தல்

***426—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியம், மரத்துறை ஊராட்சி, தெற்குத் தெருவில் உள்ள மன்மதன் சுவாமி திருக்கோயிலைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவடைவதற்குள் நூற்றுக்கு நூறு மக்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் செயல்படுகின்ற இந்த அரசு (மேசையைத் தட்டும் ஒலி) ஆன்மிகவாதிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கின்ற, ஆன்மிகத்திற்கும், ஆத்திகர்களுக்கும் உண்டான ஓர் ஆட்சி இது என்பதற்குச் சான்றாக, 100–வது கேள்வி இந்து சமய அறநிலையத் துறை குறித்து எடுத்துக்கொள்ளப்பட்டதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள் கோரியதுபோல், மன்மதன் சுவாமி திருக்கோயில் என்பது, ஆதிவாசிகளால் நடத்தப்படுகின்ற மிகச் சிறிய திருக்கோயில். அது இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லை. இருந்தாலும், ஏற்கெனவே கிராமப்புறங்களில் இருக்கின்ற திருக்கோயில்கள் மற்றும் ஆதி திராவிடர் பகுதிகளில் இருக்கின்ற திருக்கோயில்களில் தலா 1,000 திருக்கோயில்கள் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் சார்பிலே ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஆண்டுதோறும் ஒரு இலட்சம் ரூபாய் என்று நிதி வழங்கப்பட்டிருந்தது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு, மானியக் கோரிக்கை ஆய்வின்போது அந்த 1,000 திருக்கோயில்கள் என்பதை 1,250 திருக்கோயில்களாக மாற்றி, ஆண்டுதோறும் வழங்கப்பட்ட புனரமைப்புப் பணிகளுக்கான ஒரு இலட்சம் ரூபாய் என்பதை இரண்டு இலட்சம் ரூபாய் என மாற்றி அனைத்து கோயில்களையும் புனரமைப்பதற்கு உத்தரவிட்ட தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்.

2022 ஏப்ரல் 12]

(மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையிலே, இந்தத் திருக்கோயில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் சார்பில் ஒப்படைக்கப்பட்டால், அந்தக் கோயிலுக்குத் தேவையான அனைத்துப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு, புனிதத் தன்மையோடு, அனைத்துப் பணிகளும் புனரமைக்கப்பட்டு, மன்மதன் சுவாமி திருக்கோயிலை அனைவரும் வணங்குகின்ற ஒரு திருத்தலமாக மாற்றுவதற்கு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை தயாராக இருக்கின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக சட்டமன்றப் பேரவை வரலாற்றில், முதல் கேள்விக்கு மாண்புமிகு முதலமைச்சரே பதிலளித்தார் என்ற ஒரு புரட்சியை உருவாக்கி, 100—வது கேள்வி என்று புகழப்படுவது இந்தக் கேள்வி. திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதியில், 2011, 2016, 2021 என மூன்று தேர்தல்களிலும், எந்த ஒரு ஆள் பலம், படை பலம், பண பலம், நட்சத்திர அந்தஸ்து இல்லாமல், ஓலைக் குடிசையில் பிறந்த ஏழைத் தொண்டன் கோவி. செழியனை மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராக்கி, 100—வது கேள்வி கேட்பதற்கான பொன்னான வாய்ப்பை வழங்கிய நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை முதலில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

இது 100—வது கேள்வி மட்டுமல்ல; தமிழகத்தில் மக்களாட்சி நடத்துகின்ற நமது மக்களின் முதல்வர் 100 ஆண்டுகள் வாழ வேண்டும் என்ற விருப்பத்தையும் இந்தப் பேரவையில் வைத்து, 100 ஆண்டுகளையும் தொடர்ந்து நீதிக் கட்சியின் நீட்சியாக இந்த ஆட்சி தொடருவதற்கு வாழ்த்துகிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், மரத்துறை ஊராட்சி, தெற்குத் தெருவில் வீதியில் மன்மதன் சுவாமி திருக்கோயில் இருக்கிறது. அது கிராமப்புற கோயில். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, 1,000 கோயில்கள் என்பதை 1,250 திருக்கோயில்கள் என்று உயர்த்தித் தந்ததை நாங்களும் மனதார வரவேற்கிறோம்.

[2022 ஏப்ரல் 12

எனது தொகுதியிலுள்ள மன்மதன் சுவாமி திருக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் மற்றும் சிறப்புப் பூஜைகள் நடத்துவதற்கு, கோயில் புனரமைப்பு நிதியில் நிதி வழங்குவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின்படி தனியார் திருக்கோயிலில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றால், அந்தத் திருக்கோயில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும். இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், எங்கெல்லாம் இப்படி பழமையான கோயில்கள் பராமரிக்கப்படாமல், அதற்குண்டான கட்டுமானப் பணிகள் நடைபெறாமல் இருக்கின்றனவோ அந்தத் திருக்கோயில்களையெல்லாம் கணக்கெடுக்க உத்தரவைப் பிறப்பித்திருக்கின்றார்கள். மாவட்டங்கள்தோறும் அதற்குண்டான கணக்கெடுப்புப் பணி நடந்துகொண்டிருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுவாக ஒரு நிதியை உருவாக்கி, இந்தத் திருக்கோயில்களையெல்லாம் புனரமைப்பதற்கு ஆய்வுக் கூட்டத்தில் கருத்துரை வழங்கியிருக்கின்றார். இந்த அறிவிப்பு குறித்து இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் மானியக் கோரிக்கையிலே வெளியிடப்படும். அது மட்டுமல்லாமல், இந்தத் திருக்கோயிலில் திருப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தத் திருக்கோயில் மிகச் சிறிய அளவிலான திருக்கோயில். மக்களிடையே பேசி கருத்துருவை நேற்று இரவு இணை ஆணையாளர் வாங்கியிருக்கின்றார். திருக்கோயிலின் கட்டுமானப் பணி மொத்தமாகவே 200 சதுர அடிக்குள்தான் இருக்கின்றது. பாதியோடு நிறுத்தப்பட்ட அந்தத் திருக்கோயில் பணிக்கு நிதி வசதியில்லை; இடங்களும் இல்லை; வருமானங்களும் இல்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காட்டியிருக்கின்ற நல்வழியிலே நன்கொடையாளர்களை வைத்து, அந்தத் திருக்கோயிலினுடைய திருப்பணி வெகுவிரையில் நடத்தி, முடித்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2022 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் சார்பில் எந்தச் சூழ்நிலையிலும் கட்டப்படும் என்று அறிவித்த, அள்ளிக் கொடுப்பதற்கான மனது எங்களுக்கு இருக்கிறது என்பதை வெளிப்படுத்திய, இந்த பதிலுரை வழங்கியிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு அமைச்சர் அவர்களே, எனது தொகுதியில், நவக்கிரஹக் கோயில்களில் சூரிய பகவானுக்குரிய சூரியனார் கோயில், சுக்கிர பகவானுக்குரிய கஞ்சனூர் என இரண்டு இடங்கள் உள்ளன. அருகிலே திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி திருக்கோயில், ராகு ஸ்தலம் திருநாகேஸ்வரம், தென் திருப்பதி என்று சொல்லப்படுகின்ற உப்பிலியப்பன் திருக்கோயில்கள் உள்ளன. வருகிற பக்தர்கள் எங்கே தங்குவது? ஆக, அதிகமாக திருக்கோயில்கள் உள்ள எனது தொகுதியில், பக்தர்கள் வந்து இலவசமாகத் தங்கி, தரிசனம் செய்வதற்கு வசதியாக, பல்லடுக்குக் கொண்ட சுற்றுலா மாளிகையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் கட்டித் தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கடந்த ஆண்டு நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடர் அறிவிப்பில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகின்ற திருக்கோயில்களை ஆய்வு செய்து, தேர்வு செய்து, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, சுற்றுலாத்தலத்தில் அமைந்திருக்கின்ற 7 திருக்கோயில்களுக்கு தங்கும் விடுதிகளைக் கட்ட உத்தரவிட்டு, கிட்டத்தட்ட ரூ.16 கோடி செலவில் இன்றைக்கு அந்தப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. தாங்கள் சார்ந்திருக்கின்ற மாவட்டத்தில் உள்ள நாகநாதசுவாமி*

[2022 ஏப்ரல் 12

திருக்கோயில், ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு 6 கோடியே 71 இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் நிறைவேற்றப்பட்டு, அதற்குண்டான அணுகு சாலைகள் அமைக்க 60 இலட்சம் ரூபாய்க்கு இப்போதுதான் ஒப்புதல் வழங்கியிருக்கின்றோம்.

அதேபோன்று நீங்கள் சார்ந்திருக்கின்ற அந்த மாவட்டத்தில் உள்ள 10 திருக்குளங்களில் திருப்பணிகளை மேற்கொள்ள, இன்றைக்கு 1 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இரண்டு திருத்தேர்களின் திருப்பணிகள் சுமார் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் நடந்து கொண்டிருக்கின்றன. நந்தவனம் 10 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்த மாவட்டம், அந்த மாவட்டம் என்று பார்க்காமல் சனி பகவானை வழிபடுகின்ற, குறைகள் தீர்க்கின்ற,பக்தர்களின் கோரிக்கைகளை நிறைவு செய்கின்ற அந்தத் தலங்களுக்கு அதிக அக்கறை செலுத்தியிருக்கின்றார். நீங்கள் குறிப்பிடும் அந்த சூரிய பகவான் திருக்கோயில் என்பது, மதுரை ஆதீனத்தின்கீழ் வருகிறது. சட்டப் பிரிவு 46(3)—ன்கீழ் வருகின்ற திருக்கோயிலாகும். அதேபோல், மற்றொரு கோயிலான, திருவிடைமருதூர் திருக்கோயில் என்பது திருவாவடுதுறை ஆதீனத்தின்கீழ் வருகிறது. இந்த இரண்டு திருக்கோயில்களிலும் திருமண மண்டபம் கட்டுவதற்கு, ஏற்கெனவே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு, அவர் அதற்கான உத்தரவையும் வழங்கியிருக்கின்றார். இந்த மானியக் கோரிக்கையில் அதுவும் இடம்பெறும் என்ற நம்பிக்கையை மாண்புமிகு உறுப்பினருக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லையென்றாலுங்கூட, நடவடிக்கையின் அவசியம் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மதுரையில் ஒரு மாத காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற,

2022 ஏப்ரல் 12]

உலகப் பிரசித்திபெற்ற சித்திரைத் திருவிழாவில் 10 இலட்சம் மக்கள் கூடக்கூடிய அந்தத் திருவிழாவிலே முத்தாய்ப்பாக தேரோட்டமும், மீனாட்சி சொக்கநாதருடைய திருக்கல்யாணமும், அதேபோல் கள்ளழகர் ஆற்றில் இறங்குகின்ற அந்த வைபவமும் நடக்கயிருக்கின்றன. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக, இந்நிகழ்வின்போது, முன்னாள் முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையில், தண்ணீர் திறந்து விடுவது, பாதுகாப்பு நடவடிக்கைகள், குடிநீர் வசதி, மருத்துவ வசதி, பக்தர்கள் தரிசனம், மண்டகப்படி போன்றவற்றிற்காக ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பது குறித்து மக்களுக்கு தெளிவான விவரங்கள் கொடுக்கப்பட்டன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மருத்துவ வசதி, பாதுகாப்பு வசதி, தண்ணீர் திறந்துவிடுதல் போன்ற வசதிகளுக்கான ஏற்பாடுகள் குறித்து. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஏற்கெனவே அந்தத் திருநாளுக்காக அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு, பக்தர்கள் எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். எந்தப் பிரச்சினையும் இல்லை. மேலும், நீங்களும் உங்கள் கருத்துகளைச் சொல்லிவிட்டீர்கள். மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அமைந்திருக்கிற இந்த அரசு திட்டமிட்டுச் செயல்படக்கூடிய ஓர் அரசாகும். 'வருமுன் காப்போம்' என்பதற்கு ஓர் அரசு இருக்கிறது என்றால், அது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் அமைந்திருக்கிற இந்த அரசாகத்தான் இருக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) 14 ஆம் தேதி தொடங்கி 16 ஆம் தேதி வரை நடைபெறுகின்ற இந்தத் திருவிழாக்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மாவட்டத்தினுடைய மருத்துவ அலுவலர்கள் மற்றும் தீயணைப்பு அலுவலர்களுடன் ஏற்கெனவே கலந்தாய்வுக் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. 20 இடங்களில் தானியங்கி கேமராக்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. சுமார் 40 இடங்களில் மொபைல் ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு, மருத்துவ உதவி தேவைப்படுபவர்களுக்கு உடனடியாக மருத்துவ சிகிச்சை அளிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

[2022 ஏப்ரல் 12

அதேபோல், கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கும், ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் சுமார் 3,000 காவலர்களை இந்தத் திருவிழாவில் பயன்படுத்த இருக்கின்றார்கள். நோய்த்தொற்று வராமல் இருப்பதற்காக மதுரை மாநகராட்சியின் உதவியோடு, சுகாதாரப் பணியாளர்கள் அதிகளவில் நியமிக்கப்பட்டு, அவ்வப்போது சேர்கின்ற குப்பைகளை உடனுக்குடன் அகற்றுகின்ற பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர்.

கிட்டத்தட்ட 50 இடங்களில் குடிநீர் வசதிகளை ஏற்பாடு செய்ய வலியுறுத்தியிருக்கின்றோம். கழிப்பிட வசதி அத்தியாவசியத் தேவை என்பதால், 40 இடங்களில் கழிப்பிட வசதிகளையும் ஏற்படுத்தியிருக்கின்றோம். இதோடு மட்டுமல்லாமல், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, மாவட்ட அமைச்சரான வணிக வரித் துறை அமைச்சர் அண்ணன் திரு. மூர்த்தி அவர்களும், அன்பிற்கினிய நிதியமைச்சர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்களும் நேற்றைக்கு முன்தினம், ஞாயிற்றுக்கிழமை அன்று மதுரையிலே களத்திற்குச் சென்று கலந்தாய்வுக் கூட்டத்தைக் கூட்டி ஆய்வு செய்திருக்கின்றார்கள்.

முற்பகல் 10–55

கூடுதலாகத் தேவைப்படுகின்ற பணிகளைக் கவனிப்பதற்கு துறையின் கூடுதல் ஆணையாளர் திரு. கண்ணன், I.A.S. அவர்கள் நேற்றைய தினத்திலிருந்து அங்கு பணியில் இருக்கிறார். அருகில் இருக்கின்ற மாவட்ட திருக்கோயில் இணை ஆணையர்கள் நான்கு பேர், திறமைவாய்ந்த மூத்தவர்களை அங்கே பணி நியமனம் செய்திருக்கின்றோம். பக்தர்களுடைய அனைத்துத் தேவைகளும் நிறைவு செய்யப்பட்டு மகிழ்ச்சியோடு இறை தரிசனத்திற்கு அனைத்து ஏற்பாடுகளையும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் செய்திருக்கிறார்கள். இன்றைக்குக்கூட நான் ஒரு தொலைக்காட்சியில் பார்த்தேன். கள்ளழகர் ஆற்றில் இறங்குகின்றபோது தேவையான தண்ணீரைத் திறந்துவிடுவதற்கான உத்தரவும் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. கள்ளழகர் ஆற்றில் இறங்குவதற்குண்டான அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நீங்களும் வந்து தரிசனம் செய்யலாம். முறையாக அனைவருக்கும் அழைப்பையும் அனுப்பச் சொல்லி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆகவே, இறை தரிசனத்திற்கு உகந்த ஓர் ஆட்சியாக இந்த ஆட்சி இருக்கும் என்பதில் உங்களுக்கு எந்தவிதமான ஐயமும்

2022 ஏப்ரல் 12]

தேவையில்லை என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளில் நான்காவது படைவீடு எனது பாபநாசம் தொகுதியில் இருக்கக்கூடிய சுவாமிமலையில் உள்ள சுவாமிநாத சுவாமி திருக்கோயில். சமீபத்தில் நான் அங்கு ஆய்வுக்குச் சென்றிருந்தேன். அங்கு வரக்கூடிய பக்தர்கள், வயதானவர்கள், மூட்டுவலி உள்ளவர்கள் அந்தப் படிகளில் ஏறிச்சென்று தரிசனம் செய்வதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, அந்தக் கோயிலில் மின்தூக்கி வசதி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முருகனின் ஆறுபடை வீடுகளில் நான்காவது படை வீடு சுவாமிமலை ஆகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது முதலில் நன்றி சொல்வார் என்று எதிர்பார்த்தோம். நான்காவது படைவீடான அந்தப் படைவீட்டில் கடந்த முறை சட்டமன்றப் பேரவை அறிவிப்பில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பக்தர்கள் வந்து தங்குவதற்கு வசதியாக தங்கும் விடுதி அமைக்க ரூ.4 கோடி அளித்து, இன்றைக்கு ஒப்பந்தம் முடிந்து அந்தப் பணிகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தொடங்கவிருக்கிறார்கள். அவர் கம்பிவட ஊர்தியைக் கேட்டார். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Lift *வசதி கேட்டார்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: Lift *வசதியைக் கேட்டார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஏற்கெனவே தேர்தல் அறிக்கையில் அறிவித்தது; 5 இடங்களில் இதுபோல் படிக்கட்டுகள், மலை ஏறுவதற்கு கடினமாக இருக்கின்ற திருக்கோயில்களில், மலைக்கோயில்களில் 5* rope car*–கள் என்று அறிவித்து தற்போது*

அது 7–ஐ தாண்டி இருக்கின்றது. கேட்டதெல்லாம் தருகின்ற இந்த ஆட்சி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையில் இருக்கின்ற ஆட்சி. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வி குறித்து கள ஆய்வு செய்து சாத்தியக்கூறுகள் இருக்குமெனில் நிச்சயமாக இந்த ஆண்டே அதற்குரிய பணிகள் துவங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 101, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

101—

பயிற்சி மையம்

***3909—திரு. செ. ராஜேஷ் குமார்:**

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிள்ளியூர் தொகுதியில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையப் பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கிள்ளியூர் தொகுதியில் போட்டித் தேர்வுக்கான இலவசப் பயிற்சி மையம் அமைப்பது குறித்து அரசின் ஆய்வில் தற்போது இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தினைப் பொறுத்தவரையில், சென்னைக்கு அடுத்தபடியாக 91 விழுக்காடு*